

# பனிமயம்

**அக்டோபர் 2025**

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



செபமாலை மாதா



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, நலந்தானா?

செப்டம்பர் மாதத்தை விவிலிய மாதமாக சிறப்பித்து பல சிறப்பு செயல்பாடுகளை மேற்கொண்டோம். விவிலிய போட்டிகள், விவிலிய விழாக்கள் என்று முடிந்து விடாமல் புனித யாக்கோபு 1:22ல் கூறுவதுபோல "இறைவார்த்தையைக் கேட்பவர்களாய் மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடப்பவர்களாயும் இருங்கள்". நம் பிள்ளைகளுக்கு இறைவார்த்தையை தினமும் வாசிக்கக்கூடிய ஆர்வத்தையும், ஊக்கத்தையும் கொடுங்கள்.

அக்டோபர் மாதம் என்றாலே ஜெபமாலை மாதாவுக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட மாதம் என்பதை நாம் நன்கறிவோம். ஜெபமாலை பக்தி என்பது நம் மக்கள் மத்தியில் பெருகியிருப்பதைப் பார்க்கும்போது மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். முன்னர் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக மக்கள் தங்கள் கழுத்துகளில் ஜெபமாலையை அணிந்திருக்கிறார்கள். வாகனங்களில் ஜெபமாலையை மாதாவின் உடனிருப்பை, பாதுகாப்பை உணருகின்ற விதமாக தொங்கவிட்டிருக்கிறார்கள். ஆனால் ஜெபமாலை இவ்விரு நோக்கங்களுக்காக தரப்பட்டது அல்ல. மாறாக, தீமையை எதிர்த்து நிற்கவும், அலகையின் அதிகாரத்தை முறியடிக்கவும் மாதாவால் தரப்பட்டிருக்கும் ஓர் ஆயுதம். எனவே தினமும் நாமும் ஜெபமாலையை ஜெபிப்போம். நம் பிள்ளைகளையும் ஜெபிக்கத் தூண்டுவோம்.

"அருள் பரவட்டும்" என்னும் தலைப்பில் இம்மாத பனிமயம் வெளியீடு அமைந்துள்ளது. இறையருள் நம்மீது பல வழிகளில் பொழியப்படுகிறது. அதிலும் குறிப்பாக ஜெபமாலை ஜெபிப்பதால் மாதா வழியாக இறையருள் நம்மீது பொழியப்படுகிறது. அவ்வருளை நாம் பெற்றுக்கொள்ள நம்மை தகுதியுடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும். மேலும் பெறுகின்ற அருளை பிறருக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய விதமாய் நம் வார்த்தைகளும், வாழ்வும் அமையட்டும்.

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 27 தாரகை 2

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. | 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. | 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. | 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. | 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

**பல்வேறு சமய மரபுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காக...**

அமைதி, நீதி மற்றும் மானுடச் சகோதரத்துவத்தைப் பாதுகாத்து ஊக்கப்படுத்திட, மாறுபட்ட சமய மரபுகளை நம்புபவர்கள் இணைந்து பணியாற்ற நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...


1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
   அருள்பணி. குமார்ராஜா
2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
   கலாபன் வாஸ்
3. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . . 8
   அருள்பணி. க.செ. பிரவீன் ராசு
4. பழையதே நல்லது . . . . . . . . . . . . . . . . . . 10
   ம. வெனான்சியுஸ்
5. அருள் பரவட்டும் . . . . . . . . . . . . . . . . . . . . . 12
   ரோஸ் சேவியர்
6. இம்மாதப் புனிதர் . . . . . . . . . . . . . . . . . . . . . 14
   அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்
7. நம்புங்கள்! செபியுங்கள்! . . . . . . . . . . . . . . . . 16
   முனைவர் சி. ஜாக்சன்
8. செபிப்போம் செபமாலை. . . . . . . . . . . . . . . . 18
   M. பவுல் ராஜ்
9. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . 19
10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 22
11. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . 25

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 33 துயருறுவோரின் ஆறுதல்!

மரியன்னையின் புகழ்மாலையில் வரும் “துயருறுவோரின் ஆறுதல்” (Comfort of the Afflicted) என்னும் திருப்பெயர் கத்தோலிக்கரின் நெடுங்கால நம்பிக்கைகளுள் ஒன்றை வெளிப்படுத்துகிறது.



தன் வாழ்வில் தாமே பல்வேறு துயரங்களை அனுபவித்ததால்தான் மரியா துயருறுவோரின் ஆறுதலாகத் திகழ்கிறார் என்கிறார் புனித ஜான் ஹென்றி நியூமன். குறிப்பாக, குழந்தை இயேசுவைத் தூக்கிக் கொண்டு எகிப்து நாட்டிற்கு ஓர் ஏதிலியாகப் பயணம் மேற்கொண்ட துயரத்தையும், இயேசுவின் இறப்புக்குப் பின்னர் புனித யோவானின் அடைக்கலத்தில் எபேசுக்கு மேற்கொண்ட பயணத்தையும் சுட்டிக் காட்டுகிறார் நியூமன்.

துயருறும் அனைவருக்கும் ஆண்டவர் தாமே ஆறுதல் தருவார் என்பதே இறைவனின் வாக்குறுதி. எனவேதான், “சீயோனுக்கு அடித்தளமிட்டவர் ஆண்டவர்; அவர்தம் மக்களுள் துயருறுவோர் அங்கேயே புகலிடம் பெறுவர்” (எசா 14:32) என்று முன்னறிவித்தார் இறைவாக்கினர் எசாயா.

ஒரு மனிதர் பெறும் ஆறுதல்கள் அனைத்திலும் தாயின் ஆறுதலே மிகவும் சிறந்தது என்பதே நம் அனுபவம். எனவேதான், “தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள்” (எசா 66:13) என்று எசாயா வழியாக இறைவனே மொழிந்துள்ளார். இறைத் தேற்றுதலின் அடையாளமாகவே நம் அன்னை மரியா விளங்குகிறார்.

இயேசுவும் “துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்” (மத் 5:4) என்று வாக்களித்தார். அதுமட்டுமல்ல, “நீங்கள் துயருறுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்” (யோவா 16:20) என்றும் துணிந்து உறுதியளித்தார். அந்த வாக்குறுதியின் அடையாளமே நம் அன்னை மரியா.

இன்று உலகம் முழுவதும் மரியன்னைத் திருத்தலங்களுக்கு மக்கள் திரண்டு செல்வது ஏன்? அவர் தங்களுக்காக இறைவனிடம் பரிந்து மன்றாடி தங்களது துயரம் நீங்க வழி செய்வார் என்பதால்தான்.

இத்தகைய பின்னணியில்தான் “சனிக்கிழமை சலுகை” (Sabbatine Privilege) என்னும் நம்பிக்கை 13ஆம் நூற்றாண்டில் தோன்றியது. உத்தரியம் அணிந்து, செபமாலை செபித்து, துறவற அறங்களைப் பின்பற்றும் கார்மல் துறவியர் இறக்கும்போது, சனிக்கிழமைகளில் அன்னை மரியா அவர்களுக்காகப் பரிந்து மன்றாடி, உத்தரிக்கும் நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பார் என்பதே சனிக்கிழமை சலுகை எனப்பட்டது. மரியா துயருறுவோர்க்கு ஆறுதல் என்பதற்கு இந்த நம்பிக்கையும் வலுசேர்க்கிறது. ★

# 34 கிறித்தவர்களின் துணை!



லொரெட்டோ மன்றாட்டு மாலையில் வரும் “கிறித்தவர்களின் துணை” (Help of Christians) என்னும் திருப்பெயரின் பின்னால் பெரிய வரலாறு இருக்கிறது என்பது பலருக்கும் தெரியாது. கி.பி. 345ஆம் ஆண்டே புனித ஜான் கிறிசோஸ்தம் மரியாவுக்கு இப்பெயரை வழங்கினார் என்பது ஒரு வியப்பான தகவல். இது மரியாவுக்கு வழங்கப் பட்டுள்ள மிகப் பழமையான பெயர்களுள் ஒன்று என்பது கூடுதல் சிறப்பு.

கி.பி. 1571ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள் லெபாந்தோ என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் வியத்தகு முறையில் கிறித்தவர்கள் வெற்றி பெற்றனர். எனவே, அந்நாள் செபமாலை அன்னையின் நாளாகக் கொண்டாடப்படுகிறது. அந்தப் போரிலிருந்து திரும்பிய வீரர்கள் லொரெட்டோ திருத்தலம் சென்று “கிறித்தவர்களின் துணையான அன்னையே” வாழ்க என்று வாழ்த்தினர். அந்த வெற்றியின் நினைவாகவே மன்றாட்டு மாலையில் இப்பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை ஏழாம் பயஸ் நெப்போலியனால் கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்தார். லெப்சிக் போரில் நெப்போலியன் தோல்வியைத் தழுவியபோது திருத்தந்தை விடுதலை செய்யப்பட்டு, உரோமைக்குப் பவனியாக அழைத்துவரப்பட்டார். 1814ஆம் ஆண்டு மே 24 அன்று உரோமையை அடைந்த திருத்தந்தை ஏழாம் பயஸ் தமது துயரங்களில், திருஅவையின் நெருக்கடி வேளையில் துணை நின்றதற்காக மரியா கிறித்தவர்களின் துணை என்னும் விழாவை ஏற்படுத்தினார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான “திருஅவை” மரியாவைக் கிறித்தவர்களின் துணை என்று அழைத்து அவரது தாய்மையால் இவ்வுலகின் துயரப் பயணங்களில் கிறித்தவர்களுக்கு மரியா துணை நிற்கிறார் என்கிறது.

உண்மையில், கடவுள்தாம் நமது துணை. இதனால், நாம் துணிவோடு, “ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன்; மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்?‘ என்று கூறலாம்” (எபி 13:6). தூய ஆவியாரும் நமக்குத் துணையாய் இருக்கிறார் (பிலி 1:19). இறைவனின் சிறப்பு அருளைப் பெற்ற மரியாவும் நமக்குத் துணையாய் இருக்கிறார் என்பதில் நாம் மகிழ்கிறோம்.

கிறித்தவர்களின் (துணை) சகாய அன்னை என்னும் விழா மே மாதம் 24ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. புனித ஜான் போஸ்கோவின் முனைப்பால் சலேசியர்கள் ஒவ்வொரு மாதமும் 24ஆம் தேதியை கிறித்தவர்களின் துணையான அன்னையின் நினைவாகக் கொண்டாடுகிறார்கள்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## கிறிஸ்துவின் திருப்பணி நிலையில் பொதுநிலையினரின் பங்கு



**கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பெற்று, தூய ஆவியினால் அருள்பொழிவு செய்யப் பட்டவர்கள்** என்ற முறையில் பொது நிலையினர் ஆவியாரின் கொடைகளை அதிகமாகப் பெறும்படியாக வியத்தகு முறையிலே அழைக்கப்பட்டு ஆயத்தம் செய்யப்படுகின்றனர்..... எங்கும் தூய்மையாகச் செயல்பட்டு வழிபடுபவர் என்ற முறையில் **பொதுநிலையினர் உலகையே கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர்.** (திருச்சபை எண் - 34).

ஒப்புயர்வற்ற, என்றும் வாழும் திருப்பணியாளராகிய இயேசு கிறிஸ்து தம் சான்றும் சேவையும் பொதுநிலையினரின் வழியாகவும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென விரும்புகிறேன்.

தம்முடைய வாழ்வோடும் பணியோடும் அவர்களை இறுகப் பிணைத்து, கடவுளின் மாட்சிக்காகவும் மக்களின் நிறை வாழ்வுக்காகவும் ஆவிக்குரிய வழிபாட்டை நிறைவேற்றும்படி, கிறிஸ்து தம்முடைய திருப்பணி அலுவலில் அவர்களுக்குப் பங்களிக்கிறார். இதே காரணத்திற்காகவே,

* **கிறிஸ்துவின் இறைவாக்குரைக்கும் அலுவலிலே பொதுநிலையினரின் பங்கு**

“மாபெரும் இறைவாக்கினரான கிறிஸ்து தமது வாழ்வின் சான்றினாலும் போதனையின் வல்லமையினாலும் தந்தையின் ஆட்சியைப் பறைசாற்றினார்.... அவர் தம்முடைய பெயராலும் அதிகாரத்தாலும் கற்பிக்கும் திருச்சபை ஆட்சியினர் மூலம் மட்டுமல்ல, **பொதுநிலையினர் வழியாகவும் இவ்வலுவலை ஆற்றிவருகின்றார்.**

இதற்காக, அவர்களின் அன்றாட குடும்ப, சமூக வாழ்விலே நற்செய்தியின் வல்லமை திகழும்படி, அவர்களைத் தம் சாட்சிகளாக நியமித்து, நம்பிக்கை உணர்வையும் அருள் வழங்கும் வார்த்தையையும் அளித்துள்ளார் (காண்க : திப 2:17, 18; திவெ 19:10).

இறைவாக்குரைக்கும் அலுவலைப் பொறுத்தமட்டில் தனி அருளடையாளத்தால் தூய்மையாக்கப்பட்ட திருமண, குடும்ப வாழ்வு மிகவும் முக்கியமானது. கிறிஸ்தவ சமயம் முழுமையாக ஊடுருவி நாளுக்கு நாள் அதிகமாக உருமாற்றுகிற வாழ்வு அமைப்பு இதுவேயாதலால் **இங்குதான் பொது நிலையினர் திருத்தூதுப்பணி செயலாக்கப் பெறுகிறது.** இவ்வாழ்வு அமைப்பே திருத்தூதுப்பணியின் சிறந்த பள்ளியாகவும் அமைகின்றது. இங்குதான் கணவர் மனைவியர் ஒருவரொருவர் முன்னிலையிலும், தம் மக்கள் முன்னிலையிலும் கிறிஸ்துவின் அன்பிற்கும் அவர் மேலுள்ள நம்பிக்கைக்கும் சாட்சிகளாக நின்று தமக்கே உரிய அழைத்தலுக்கு ஏற்ப வாழ்கின்றனர்.

உலகக் கவலைகளுக்கிடையே வாழும் போதும் பொதுநிலையினர் உலகிலே நற்செய்தியை அறிவிக்கச் சிறந்த பணி ஆற்ற முடியும்; ஆற்றவும் வேண்டும். திருப்பணியாளர்கள் இல்லாத இடங்களிலும் திருமறையைத் துன்புறுத்தும் ஆட்சி முறைகளால் அவர்கள் தடைசெய்யப்பட்ட நேரத்திலும் பொதுநிலையினரில் சிலர் தங்களால் முடிந்தவரை சில திருப்பணிகளுக்கு உதவுகின்றனர். இவர்களுள் பலர் தங்கள் முழு ஆற்றலையும் திருத்தூதுப் பணிக்கென அர்ப்பணித்து இருக்கின்றனர். எனினும், அனைவரும் கிறிஸ்துவின் ஆட்சி உலகில் பரவி வளர்வதற்கு ஒத்துழைக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர். எனவே, வெளிப்படுத்தப் பட்ட உண்மைகள் பற்றி ஆழ்ந்த அறிவு பெறப் பொதுநிலையினர் திறம்பட முயல்வார்களாக, ஞானமெனும் கொடையைக் கடவுளிடமிருந்து பெற அயராது இறைஞ்சி வேண்டுவார்களாக. - திருச்சபை - எண் : 35.

## ✴ கிறிஸ்துவின் அரச அலுவலிலே பொதுநிலையினரின் பங்கு

“கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதே ஆள்வதாகும். ஆண்டவர் தமது ஆட்சியைப் பொதுநிலையினரின் மூலமாகவும் பரப்ப விரும்புகிறார். இவ்வாட்சி உண்மையின் ஆட்சி, வாழ்வின் ஆட்சி, தூய்மையின் ஆட்சி, அருளின் ஆட்சி, நீதியின் ஆட்சி, அன்பின் ஆட்சி, அமைதியின் ஆட்சி. இந்த ஆட்சியில் படைப்பு அழிவுக்கு அடிமைப் பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைக்குரிய பெருமையையும் விடுதலையையும் பெறும் (காண் : உரோ 8:21).

உலக அமைப்புகளும், வாழ்க்கைச் சூழல்களும் பொதுவாகப் பாவத்திற்குத் தூண்டுதலாக அமையுமேயானால், பொது நிலையினர் தங்கள் ஆற்றல் அனைத்தையும் திரட்டி அவற்றைத் திருத்தி அமைத்து அதன் மூலம் அவை அனைத்தையும் நீதி நெறிக்கேற்பச் சீர்படுத்தி, நற்பண்புடைத்த வாழ்விற்குத் தடையாக அமையாமல் உறுதுணையாக இருக்குமாறு செய்ய வேண்டும். இதன் மூலம் மனிதப் பண்பாடும் செயல்களும் அறநெறி மதிப்புப் பெறும்படி செய்கின்றனர். ....அமைதியின் தூதை உலகிற்கு அறிவிக்கத் தேவையான வாயில்கள் திருச்சபைக்கு இன்னும் அகலத் திறக்கப்படுகின்றன” - திருச்சபை - 36.

*தொகுத்தளிப்பவர் :* **கலாபன் வாஸ்**

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 3



### 1. தூண் மாதா காட்சி

மரியன்னை காட்சிகளுள் முதல் காட்சியாக தூண் மாதா காட்சியை அக்டோபர் மாத இதழில் பார்க்கலாம். இக்காட்சி நடைபெற்ற நாள் அக்டோபர் மாதம் 12ஆம் நாள் என்பதால் இந்த இதழில் இக்காட்சி பற்றிய செய்தி வெளிவருவது மிகவும் பொருத்தமானது.

நோஸ்த்ரா செனோரா தெல் பிலார் தெல் சரகோசா (Nuestra Señora del Pilar de Zaragoza) என்ற பெயரை அறியாதவர்கள் யாரும் ஸ்பெயின் நாட்டில் இருக்க முடியாது. சரகோசாவின் தூண் மாதா எனப் பொருள்படும் இப்பெயர் அன்னை மரியா ஸ்பெயின் நாட்டின் சரகோசா நகரில் திருத்தூதர் யாக்கோபுக்குக் கொடுத்த காட்சியின் அடிப்படையில் உருவானது. இந்தக் காட்சி மரியன்னையின் காட்சிகள் அனைத்திலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காட்சி. அதற்குப் பல காரணங்களுண்டு.

முதலாவதாக, இது அன்னை மரியாவின் காட்சிகளிலேயே காலத்தால் முந்தையதாக, முதல் காட்சியாக உள்ளது. இரண்டாவதாக, இக்காட்சி மரியன்னை உயிரோடு வாழ்ந்தபோதே நடைபெற்ற காட்சி. கி.பி. 40ஆம் ஆண்டில் இக்காட்சி நடந்தேறியபோது, அன்னை மரியா திருத்தூதர் யோவானோடு எருசலேம் நகரில் வாழ்ந்து வந்தார். எனவே, இதனைக் காட்சி என்று அழைக்காமல், ஈரிடத் தோற்றம் (Bi-location) என்று அழைப்பவர்களும் உண்டு.

பாதுவா நகர் அந்தோனியார் போன்ற புனிதர்கள் பலரும் ஈரிடத் தோற்ற வரம் பெற்றவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. எப்படியிருப்பினும், அன்னையின் அற்புதக் காட்சிகளுள் முதல் காட்சியாக தூண் மாதா காட்சி எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது என்பதே முக்கியமானது.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்னர், திருத்தூதர்கள் அனைவரும் உலகின் பல்வேறு இடங்களுக்குச் சென்று நற்செய்தியைப் பறைசாற்றி வந்தனர் என்பது வரலாறு. திருஅவையின் தொன்மையான மரபுப்படி, செபதேயுவின் மகனும், திருத்தூதர் யோவானின் சகோதரருமான புனித யாக்கோபு இஸ்பானிய உரோமை (Roman Hispania) என்று அக்காலத்தில் அறியப்பட்ட, தற்போதைய ஸ்பெயின் நாட்டின் பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்த பல்வேறு இனக் குழுக்களுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவித்து வந்தார். இவரது பணி மிகவும் சவாலான ஒன்றாக இருந்துள்ளது. அதேவேளையில், தொடர்ந்து

உழைத்தும், பலவகைகளில் முயன்றும் அவரால் அங்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. தன் அயராத உழைப்பின் பரிசாகக் கையளவு மக்களையே அவரால் மனந்திருப்ப முடிந்தது. அவரது பணிவாழ்வு அவருக்கு பெருத்த ஏமாற்றத்தையே அளித்தது.

இதனால் பெரிதும் மனச்சோர்வுற்ற திருத்தூதர் யாக்கோபு, தொடர்ந்து இதே இடத்தில் பணியாற்ற வேண்டுமா, அல்லது வேறு இடத்திற்குச் சென்றுவிடலாமா என்று சிந்திக்கத் தொடங்கினார். ஒருமுறை செசார் அகுஸ்தா (Caesar augusta) என்ற இடத்தில் (தற்போது சரகோசா) உள்ள எப்ரோ நதியின் கரையில் அமர்ந்து இதைக் குறித்து ஆழ்ந்த யோசனையில் அவர் அமர்ந்திருந்தார். அப்போதுதான் அவர் கனவிலும் எதிர்பார்த்திராத பெருவியப்பான நிகழ்வு அங்கு நடந்தேறியது.

தன் திருமகனின் பணியைத் தொடர்ந்து செய்யுமாறு, அவரது சீடரை ஊக்குவிப்பதற்காக அன்னை மரியா திருத்தூதர் யாக்கோபுக்குக் காட்சி தந்தார். எருசலேமில் யாக்கோபுவின் தம்பி யோவானோடு தங்கியிருந்த அன்னைக்கு யாக்கோபுவின் மனக்கவலை கலக்கத்தைத் தந்திருக்க வேண்டும். எனவேதான், அவரைத் தேற்றுவதற்காக பலநூறு மைல்களைக் கடந்து சரகோசாவுக்கு வந்திருக்கின்றார்.

இப்போது காட்சிக்கு வருவோம். தன் பணிவாழ்வு எதிர்பார்த்த பலன் தராத கவலையில் ஆற்றங்கரையில் அமர்ந்து செபித்துக் கொண்டிருக்கின்றார், திருத்தூதர் யாக்கோபு. அவரோடு அவரது போதனையால் மனம்மாறிய எட்டு சீடர்களும் இருக்கின்றனர். கண்களை மூடி, உள்ளம் உருக மன்றாடிய அவர்கள், கண்களை வான்நோக்கித் திறந்தபோது, ஒரு பெரிய தூணைப் பார்க்கின்றார்கள். அந்தத் தூணைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான வானதூதர்கள் சூழ்ந்து நிற்க, அத்தூணின் மீது கைகளில் குழந்தை இயேசுவோடு அன்னை மரியா நின்று கொண்டிருக்கின்றார். செபித்துக் கொண்டிருந்த யாக்கோபுவைத் தொடர்ந்து அங்கேயே நற்செய்தி அறிவிக்குமாறு பணித்த அன்னை, “இன்னும் சில நாள்களிலேயே அப்பகுதி மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள், தங்கள் நம்பிக்கையிலும் தூண் போல உறுதியாக இருப்பார்கள். தான் நிற்கின்ற தூண் அதற்கு ஒரு முன்னடையாளமாக இருக்கும்” என்று கூறி நம்பிக்கை ஊட்டுகின்றார். அத்துடன், தன் பரிந்துரையின் மாட்சியை வெளிப்படுத்தும் பொருட்டு, தான் காட்சி தந்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்டுமாறும் சொல்கின்றார்.

அன்னையின் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளை ஏற்று, ஸ்பெயின் நாட்டில் யாக்கோபு தொடர்ந்து நற்செய்திப் பணியாற்றினார் என்பது வரலாறு. அன்னையின் வார்த்தைகளுக்கேற்ப அந்த இடத்தில் கோயிலும் கட்டப்பட்டது. இந்த உலகில் அன்னை மரியாவின் மாட்சிக்கென்று எழுப்பப்பட்ட முதல் கோயிலாக இன்றளவும் அது உள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 12 அன்று இக்கோயிலில் அன்னையின் காட்சியை நினைவுகூர்ந்து கொண்டாடப் படும் தூண் மாதா திருவிழா ஸ்பெயின் நாட்டின் பெருங் கொண்டாட்டமாகவே பார்க்கப்படுகின்றது. அதற்கு மற்றுமொரு முக்கிய காரணமும் உள்ளது. அக்காரணம் என்ன என்பதையும், இக்காட்சியில் அன்னை மரியா திருத்தூதர் யாக்கோபுக்குக் கொடுத்த ஒரு முக்கியமான பொருள் பற்றியும் அடுத்த இதழில் பார்க்கலாம்.



அருள்பணி. க.செ. பிரவீன் ராசு

# பழையதே நல்லது (லூக். 5:39)



செப்டம்பர் மாதம் கடைசி சனிக்கிழமை பனிமய மாதா பேராலயத்தில் அன்னையை தரிசித்துவிட்டு பேராலய அலுவலகத்தில் பேரனின் பிறந்தநாள் நன்றி திருப்பலி ஒப்புக் கொடுத்துவிட்டுத் திரும்பினார், செல்வராஜ்.

ரீட்டா என்ற தன் மனைவியின் செபமாலைத் தோழி, பேராலய அலுவலகத்திற்கு திருமண நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்க வந்தார். அவரைப் பார்த்து "என்ன நலமா?" என்றார்.

"அட, புரூனோ தாத்தா! நன்றி பிரதர். தினசரி உங்க செபத்தில் எங்களை நினைத்து செபித்து வருவதற்கு நன்றி பிரதர். இன்று காலையில் கூட எங்களது திருமண நாளுக்கு வாழ்த்து வாட்ஸ்அப்பில் போட்டிருந்தீர்கள். அக்கா வரவில்லையா?"

"ஆலயத்தில் செபித்துக் கொண்டிருக்கிறார். நான் அலுவலகத்திற்கு திருப்பலி எழுத வந்தேன். அது சரி, உங்கள் முகத்தில் சோக ரேகை அசைவாடுகிறதே! என்ன விஷயம்? ஏதாவது பிரச்சனையா?"

"அட, கண்டுபிடித்துவிட்டீர்களே! உங்கள் கண்ணுக்குத் தப்ப முடியுமா? இரண்டு தினங்களுக்கு முன்பாக என் மகன், மருமகள், பேரன் இரு சக்கர வாகனத்தில் அவனது நண்பரின் இல்லத்திற்குச் சென்று திரும்பியபோது, இரவில் சாலையில் பாதையில் மேடுபள்ளத்தில் தடுமாறி மூவரும் விழுந்துவிட்டார்கள். மகனுக்கு மட்டும் காயம், மற்ற இருவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்காக நன்றித் திருப்பலி எழுதிவிட்டு வருகிறேன். அதனால் இன்று எங்களது திருமணநாளையும் கொண்டாடவில்லை."

"அப்படியா சகோதரி, நீங்கள் வேண்டுதல் செய்கிற ஆண்டவர் உங்களையும் உங்கள் குடும்ப உறுப்பினர்களையும் கைவிடமாட்டார். மாதாமாதம் உங்கள் இல்லத்தில் குழுவாக அன்னைக்கு செபமாலை மற்றும் மன்றாட்டு மாலை செபித்து வருகிறீர்களே. செபமாலை சோதனைகளை வென்றுவிடும்!"

"நன்றி பிரதர். வருகிறேன்."

ரீட்டா செபமாலை மாதாவின் மேல் மிகுந்த பக்தி கொண்டவர். இல்லத்தில் செபமாலை மாதா சுரூபம் ஒரு அழகிய சுரூபக்கூட்டில் மெல்லிய மின்விளக்கு ஒளி வீச அமைந்திருக்கும்.

தினசரி இரவு 6.30 மணிக்கு ரீட்டா, கணவர், மகன், மருமகள், மகள், மருமகன், பேரன், பேத்தி அனைவரும் முழந்தாள்படியிட்டு திருவிவிலியம் வாசித்து, செபமாலை செபிக்கத் தவறுவதில்லை. இது தவிர மாதம் முதல் சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல்லத்தில் குழுவாக செபித்து வருவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார். பிற சகோதரிகள் இல்லங்களுக்கும் சென்று செபமாலை பக்தி முயற்சியில் அவர்களை முழுமையாக ஈடுபடுத்தி செபமாலை செபித்து வருகிறார். இவருக்கும் இந்த ஒரு விபத்து ஒரு

சோதனையாக அமைந்துள்ளது. ஆனாலும், வெற்றி தரும் செபமாலை செபிப்பதைத் தொடர்ந்தனர்.

வாசலில் அழைக்கும் குரல் கேட்டு வாயிலுக்கு வந்தவர், புதியதாக ஒரு பெண்மணியைக் கண்டார்.

"வாங்க வணக்கம்" என்று அன்புடன் வரவேற்றார் ரீட்டா.

"என்னைத் தெரியுமா உங்களுக்கு?"

"சொன்னால் தெரிந்துகொள்கிறேன்."

"வந்து, நான் ஊருக்கு வெளியே புதிதாக ஒரு செப அறை கட்டிக்கொண்டு இருக்கிறேன். வெளியூரிலிருந்தும் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் இல்லத்தில் வெளிநாட்டுத் தயாரிப்பான செபமாலை அன்னை சுரூபம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதை எங்களுக்குக் கொடுத்து உதவமுடியுமா?"

"மன்னிக்கவும். எங்கள் இல்லத்தில் நாங்கள் எட்டுபேரும் தினசரி செபமாலை அன்னையின் திருச்சுரூபம் முன்பாக மண்டியிட்டு செபித்து வருகிறோம். அதுதவிர மாதந்தோறும் குழுவாக முப்பது நாற்பது பேர் ஒன்று கூடிச் செபித்து வருகிறோம்."

"அதனாலென்ன, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும், மற்ற சகோதரிகளும் எங்கள் செப அறைக்கு வந்து இதே செபமாலை மாதா சுரூபத்தை வைத்துச் செபிக்கலாமே?"

"இல்லைங்க. இது எங்களுக்குப் பழகிப்போச்சு. இதை நம்பி பலரும் செபமாலை அன்னையிடம் செபித்து வருகிறார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் மாதா கோவிலுக்குச் சென்று மாலையில் திருப்பலிக்கு முன்பாக குழுவாக அமர்ந்து செபமாலை செபித்து வருகிறோம். எனவே எங்களுக்குப் பழையதே நல்லது. புதியதுக்கு புதிய சுரூபம் வாங்கி, நீங்கள் புதியவர்களைச் சேர்த்துச் செபியுங்கள். புதிய துண்டு பழைய ஆடையோடு பொருந்தாது என்று லூக்கா 5:36இல் வாசிக்கிறோம் அல்லவா?"

"நல்லா விவிலிய மேற்கோள் எல்லாம் கூறுகிறீர்களே! நீங்களே எங்கள் செப அறைக்குத் தலைமை தாங்கி வழி நடத்தலாமே? கார் பங்களா! ஏன் விமானம் கூட வாங்கலாமே?"

"உங்கள் காரிலோ, விமானத்திலோ நமது தாய்நாடாகிய விண்ணகம் செல்ல முடியாது! இங்கு வருகிறவர்கள் அனைவரும் தினசரி திருப்பலிக்குச் செல்பவர்கள், அன்பியங்களில் செயலாற்றுபவர்கள், மரியாயின் சேனையில் உறுப்பினர்களாக இல்லந்தோறும் இறையாட்சி மலர குழுவாகச் செபித்து வருகிறவர்கள். மொத்தத்தில் திருஅவைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள். திருஅவைக்கு மாறாக எந்த ஒரு சிறு குழப்பத்திலும் ஈடுபடமாட்டார்கள். நீங்கள் சொல்லும் செப அறையானது, குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் தனி சபையாக மாறி பிறரையும் குழப்பத்துக்குள் கொண்டுபோய்ச் சேர்க்கலாம். மீன் தொட்டியில் மீன் பிடிப்பதில் என்ன பெருமை? கடலில் போய் வலை வீசி மீன் பிடித்து உங்கள் கொட்டிலில் சேருங்கள்."

"தங்களுடன் பேசி ஜெயிக்க முடியாது! எங்கள் செப அறை எப்போதும் திறந்தே இருக்கும். ஒருவேளை நீங்கள் மனம் மாறினால் வந்து தலைமையேற்று நடத்தலாம். நான் வருகிறேன்."

"நன்றி சகோதரி. செபமாலை செபிக்கும் உள்ளங்கள் ஒருபோதும் தவறு இழைப்பதில்லை. ஏனென்றால் இது வெற்றி தரும் செபமாலை" என்று தன் கழுத்தில் இருந்த செபமலையை எடுத்துக் காண்பித்தார் ரீட்டா.



ம. வெனான்சியுஸ்

# அருள் பரவட்டும்

## [புனித செபமாலை அன்னை]

அருள் மிகப் பெற்றவரே, வாழ்க! என்று ஆண்டவரின் தூதரால் வாழ்த்துப் பெற்ற அன்னை மரியாளின் அருளைப் பெற சிறந்த கருவி செபமாலை. கிறிஸ்தவ இறையியலில் அருள் (Grace) என்பது நம்மை வாழ்வளிக்கும் இறைவன், தாமாகவே விருப்பம் கொண்டு, மனித குலத்திற்கு கொடையாக அறிவிக்கின்ற இறை அன்பையும் இரக்கத்தையும் குறிக்கும். அருள் என்பதன் கிரேக்கச் சொல் "Charis". இறைவன் மனிதர் மட்டில் கொண்டுள்ள அன்பு, பரிவு, கனிவு ஆகியவற்றின் வெளிப்பாடே "அருள்". வான தூதர், "மரியா, அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்" என்கிறார். (லூக் 1::30) இறைவன் ஆற்றுப்படுத்தும் அன்புறவாக, இறைமயமாக தம்மையே தருவதே "அருள்".



அருள் உள்ளவரோடு இறைவன் இருக்கிறார். அவரது ஆசீர் இருக்கும். நமது சிந்தனை, சொல், செயல், உணர்வுகள் அனைத்தும் தெய்வீக ஆற்றல் பெறும். அவ்வாற்றலைப் பெற்ற மரியாள், வானதூதரிடம், "நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38) என்று தன்னையே தாழ்ச்சியோடு அர்ப்பணிக்கிறார். இத்தகைய அருளை நாம் பெற அன்னையின் அருள்மாலை மிகுந்த ஆற்றல் வாய்ந்தது.

**"திருப்பலிக்கு அடுத்து நான் அதிகம் நேசிப்பது செபமாலையே" - புனித ஆலன் ரோச்**

கத்தோலிக்கர்களின் பக்தி முயற்சிகளில் ஒன்று செபமாலை. தூய ஆவியார் வழிநடத்த, திருச்சபையால் பரிந்துரைக்கப்பட்ட, புனிதர்களால் அன்பு செய்யப்பட்ட செபமாலை. 1214 ஆம் ஆண்டு செபமாலை ஆற்றல் மிகுந்த ஆயுதமாக உருவானது.

"என்னுடைய மறையுரையை விட நான் செய்த செபமாலைதான் பல ஆன்மாக்களை

***மனமாற்றம் அடைய செய்துள்ளது"*** (புனித பெர்னார்டு)

இத்தகைய வல்லமையுள்ள செபமாலை மகிமையை, அன்னையின் அருளைப் பரவச் செய்த பெருமை புனித சுவாமிநாதர் என்ற டொமினிக் என்பவரைச் சாரும். 1214ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் மக்கள் இயேசுவின் இறைத்தன்மையை மறுக்கும் அல்பிஜியன்ஸ் என்ற தப்பறைக் கொள்கை திருஅவைக்கு அதிக ஊறு விளைவித்தது. இதை எதிர்த்து புனித சுவாமிநாதர் போராடி, வெற்றி காணமுடியாமல், கடும் தவமுயற்சிகளை மேற்கொள்ளும்போது அன்னை மரியா காட்சிக் கொடுத்து, செபமாலையை நம்பிக்கையுடன் செபிக்கச் சொன்னதோடு, அதை செபிக்கும் விதத்தையும் கற்று கொடுத்தார். அதன் விளைவு மக்கள் மனம் மாறி தப்பறைக் கொள்கைகளை கைவிட்டு, செபமாலையைச் செபிக்கத் தொடங்கினர்.

புனித சுவாமிநாதரின் முயற்சியால் உலகம் முழுவதும் செபமாலை பக்தி பரவியது பனிமய மாதா பேராலயத்தில் அன்னை மரியாள் செபமாலையை புனித சுவாமிநாதருக்குக் கொடுப்பது போன்ற சுருபம் தத்ரூமாக உள்ளது. செபமாலையின் மாண்பை புனித ஆலன் ரோச் பல இடங்களில் பரவ காரணமாக இருந்தார்.

***"திருச்செபமாலை கிறித்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும்"*** – திருத்தந்தை 3ஆம் அர்பன்.

1917 ஆம் ஆண்டு செசிந்தா, லூசியா, பிரான்சிஸ் என்ற மூன்று சிறுவர்களுக்கு அன்னை மரியாள் காட்சியளித்து, தான் செபமாலை மாதா என்று வெளிப்படுத்தினார்.

1571 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே லெபந்தோ என்னுமிடத்தில் நடந்த போரில் வெற்றி பெற காரணம் கிறிஸ்தவ மக்கள் செபமாலையை கையில் ஏந்தி செபித்ததே. திருத்தந்தை ஐந்தாம் பயஸ் அன்னை மரியின் வெற்றி விழாவாகக் கொண்டாடப் பணித்தார். இளவரசர் யூஜின் ஹங்கேரி நாட்டின் எதிரிகளை வென்று 1716 ஆம் ஆண்டு அன்னையின் வெற்றியின் நாளாகக் கொண்டாடப் பணித்தார்.

***"செபமாலை செபிக்கும் ஒரு படையணியை என்னிடம் கொடுங்கள். நான் உலகை வென்று காட்டுகிறேன்"*** – திருத்தந்தை 9ஆம் பத்திநாதர்.

இயேசுவின் மீட்பு வரலாற்றில், மறை உண்மைகளை, நிகழ்ச்சிகளை அருள்மாலையாக தியானிப்பதற்கேற்றவாறு உள்ளதால் செபமாலை நற்செய்திகளின் சுருக்கம் என்கிறார் திருத்தந்தை 6ஆம் பவுல். தொடர் செபமாலை நம்மை உலக பாவங்களிலிருந்து விடுதலையும் தூயவாழ்வையும் அருளையும் நோயிலிருந்து விடுதலையும் தருகிறது என்றால் மிகையாகாது.

இத்தகைய அருள்மாலையை, வெற்றிமாலையை அனுதினமும் குடும்பத்தோடு, பக்தியோடு செபித்து தியானித்து அள்ள அள்ளக் குறையாத அன்னையின் அன்பையும் அருளாசீரையும் பெறுவதோடு மக்களிடையே அருள் பரவ முயற்சிப்போம்!



**ரோஸ் சேவியர்**

இம்மாதப் புனிதர்

# புனித இரண்டாம் யோவான் பவுல்



கி.பி. 1920 மே 18 அன்று போலந்து நாட்டில் வோடோவைஸ் நகரில் இராணுவ வீரர் கரோல் - எமிலியா கசோரங்கா என்னும் இணையருக்கு இரண்டாவது மகனாக கரோல் ஜோசப் வோய்த்திவா பிறந்தார். இவரது செல்லப் பெயர் லோலக்.

சிறுவயதிலிருந்தே இறைபக்தியுடனும், ஒழுக்கத்துடனும் வாழ்ந்து வந்தார். கரோலின் 8ஆவது அகவையில், அவரது தாய் எமிலியா இவ்வுலகை விட்டுச் சென்றார். அன்பு என்னும் நிறைகுடத்தில் ஆசைத்தீர முத்துக் குளித்தவர் அள்ளிடவும் இடமின்றி பருகிடவும் மனமின்றி சோர்ந்து கிடந்தார். அன்னை மரியைத் தன் தாயாக ஏற்றுக் கொண்டார். தாயில்லாப் பிள்ளைகளை எக்குறைக்கும் ஆளாக்காமல் நன்னெறியோடு தந்தை கரோல் வளர்த்து வந்தார்.

மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த லோலக்கின் அண்ணன் எட்வர்ட் குடும்ப வறுமையை சுமப்பான் என்ற நம்பிக்கை நனவாகியது. பெல்ஸ்கோவில் இருந்த மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றினார். பட்ட காலிலே படும் என்பதற்கேற்ப, ஊரெல்லாம் பரவிவந்த செம்புள்ளியை உண்டாக்கும் ஒருவிதமான தொற்றுநோய் காரணமாக அவரும் இறந்தார். சின்ன வயதிலேயே நம்பிக்கைச் சாளரங்கள் அனைத்தும் மூடியதைக் கண்டு சிதைந்து போனார் லோலக். இருந்தபோதிலும் காலம் தந்த காயத்திற்கு மருந்திடவும் தெரியும் என்ற நம்பிக்கையோடு எல்லாம் இறைசித்தம் என்று நன்றியால் இறைவனைப் போற்றினார்.

ஜெர்மன், கிரேக்கம், இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். கால்பந்து, பனிச்சறுக்கு, நீச்சல் போன்ற விளையாட்டுகளில் அதிக ஆர்வமுடையவராய் இருந்தார். மிகச்சிறந்த எழுத்தாளராகவும், நடிகராகவும் தனது பள்ளிப்பருவத்தில் திகழ்ந்தார். இதற்கிடையில் 2ஆம் உலகப்போர் தொடங்கியதால் அவர் வாழ்ந்த பகுதியும் பாதிப்புக்குள்ளானதால் படிப்பைத் தொடர இயலவில்லை. கல்குவாரியிலும், சல்வே தொழிற்சாலையில் தண்ணீர் சுத்திகரிப்புப் பிரிவிலும் வேலை செய்தார்.

இறைஅழைப்பினை தனது வாழ்வில் உணர்ந்த இவர் குருமடத்தில் பயிற்சி பெற்று குருத்துவ அருள்பொழிவு பெற்றார். இவரது

அறிவுத்திறன், புலமை, திறமையைக் கண்டு திருத்தந்தை இவரை துணை ஆயராக நியமித்தார். 1967 ஜூலை 28இல் கர்தினாலாக நியமிக்கப்பட்டார். திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் பொறுப்பேற்ற 33 நாள்களிலேயே இறந்ததால், புதிய திருத்தந்தைக்கான தேர்தலில் 103 வாக்குகள் பெற்று திருத்தந்தையானார். முதலாம் யோவான் பவுலைத் தொடர்ந்து திருத்தந்தையாக பொறுப்பேற்றதால் தனது பெயரை இரண்டாம் யோவான் பவுல் என மாற்றிக் கொண்டார்.

திருச்சபையிலும், சமுதாயத்திலும் ஏராளமான மாற்றங்களை உருவாக்கினார். மனிதன் இறைவன் தரும் அன்புப்பரிசு. ஆதலால் ஒவ்வொரு மனிதரும் மதிக்கப்பட வேண்டும் எனக் கற்பித்தார். கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை போன்றவற்றைக் கடுமையாகக் கண்டித்தார். 1981, மே 13இல் அக்சா என்பவரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். மறுவுயிர் பெற்று மீண்டும் திருச்சபையை வழிநடத்தினார். அந்நபரை மனதார மன்னித்தார். 2005, ஏப்ரல் 2ஆம் தேதி பார்க்கின்சன்ஸ் நோயால் இறந்தார்.

புனித பேதுரு பேராலயத்தில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களால் இவருக்கு முத்திப்பேறு பட்டம் 2011, மே 1இல் வழங்கப்பட்டது. 2014 ஏப்ரல் 27இல் இவரைப் புனிதராக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். உலக இளையோர்களின் பாது காவலராக அறிவிக்கப் பட்டுள்ளார்.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்



# நம்புங்கள்! செபியுங்கள்!



கிறிஸ்தவத்தின் அடிப்படையே நம்பிக்கை. ஆனால் இன்று அடித்தளமே ஆட்டம் கண்டது என எண்ணத் தோன்றுகிறது. குடும்பம் தான் விசுவாசத்தின் விளைநிலம். ஆனால் இன்று அந்த விசுவாச விளைநிலங்கள் தரிசாக மாற காரணம் குடும்ப செபமாலை இப்போது இல்லாமல் போனதுதான்.

முன்பெல்லாம் நம் கத்தோலிக்க குடும்பங்கள் இரவு செபமாலை சொல்லாமல் தூங்க மாட்டார்கள். வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் ஒன்றாக அமர்ந்து செபமாலை சொல்வார்கள். பல வீடுகளில் நற்செய்தி வாசித்து செபமாலை செபிப்பார்கள். இந்த செபமாலை கத்தோலிக்க குடும்பங்களை மட்டுமல்ல உலகையே காப்பாற்றிக் கொண்டிருந்தது. ஏனென்றால் செபமாலை தனிப்பட்ட ஒருவருக்காக செபிக்கப் படுவதில்லை. இறைமகன் இயேசு சொல்லி தந்த செபத்தை சொல்லும் போதெல்லாம் “எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்” என்று நாம் செபிக்கும்போது உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்காகவும் செபிக்கிறோம்.

இன்று தொலைக்காட்சி மற்றும் அலைபேசி எனும் சுழலில் சிக்கிக்கொண்டு செப வாழ்வை தொலைத்துவிட்டோம். தொலைக்காட்சி பாருங்கள். ஆனால் கடவுளுக்குண்டான நேரம் என்னவானது? என்னும் கேள்வியை தினசரி கேட்க மறவாதீர்கள். இன்றைய பரபரப்பான உலகில் ஒரே குடும்பமாக சேர்ந்து பேச, உணவருந்த நேரம் கிடையாது. ஏன் கணவன் மனைவி குழந்தைகள் மூவரையும் ஒரே நேரத்தில் வீட்டில் பார்ப்பதே அரிதாகி விட்டது. ஏதாவது ஒன்றை தேடிக்கொண்டே நமது வாழ்க்கைப் பயணம் செல்கிறது. கடவுளைத் தேடுவது என்பது கடினமாகிவிட்டது.

12ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தே செபமாலை சொல்லும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. ஆனால் இந்நாளில் செபிக்கும் முறையே அந்த நாட்களிலும் வழங்கியது என்று எண்ணலாகாது. செபமாலை என்றும் அதற்குப் பெயரில்லை. மரியின் சங்கீத மாலை என்று வழங்கப்பட்டது. குருக்கள் பாடும் 150 சங்கீதங்களைச் சங்கீத மாலை என்று பாடினர். அதைப் பின்பற்றித்தான் மரியின் சங்கீத மாலை வந்தது. 150 முறை அருள் நிறைந்த செபத்தைச் சொல்லி வந்தனர். மேலும் ஒவ்வொரு சங்கீதத்திலும் உள்ள இரண்டொரு வார்த்தைகளையோ, எண்ணங்களையோ புகுத்தி செய்யுள் அமைத்து தாயைப் புகழ்ந்தனர்.

செபமாலை எப்போதும் ஒரு குடும்பச் செபமாகவும் ஒரு குடும்பத்திற்கான

செபமாகவும் இருந்திருக்கிறது என்று புனித இரண்டாம் ஜான் பால் கூறுகிறார். செபமாலையில் நாம் ஜெபிக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைகளும் திருவிவிலியத்தில் இருந்து எடுக்கப்பட்டது. (லூக் 1:28) நாம் செபமாலை செபிக்கின்ற போது கடவுளது வார்த்தையைத்தான் தியானித்து செபிக்கிறோம். அன்னையை ஒவ்வொரு முறையும் அருள் நிறை மரியே வாழ்க! என்று வாழ்த்தும்போது இறைவனுக்குப் பெருமை சேர்க்கிறோம்.

“செபமாலை என்பது மானிடர்களை மீட்க வானவர் விடுகின்ற வடமே” என்கிறார் வீரமாமுனிவர். நம்மை பாவ வழியில் இருந்து மீட்க வந்த வல்லமை மிக்க செபமாலையை பற்றி பல புனிதர்கள் புகழ்ந்துள்ளனர். செபமாலை அருள் வரங்களின் கிரீடம் என்று தந்தை புனித பியோ கூறி அதன் மூலமாக ஏராளமான அருள் வரங்களை இறைவனிடமிருந்து பெற நம்மை வலியுறுத்துகின்றார்.

குடும்பச் செபமாலை தமிழ்நாட்டில் ஏறக்குறைய நூறு ஆண்டுகளாகவே வழக்கில் இருந்தது எனலாம். மதுரை மாகாணத்திற்கு வந்த இத்தாலிய, பிரெஞ்சு மிஷினரி குருக்கள் இவ்வழக்கத்தை ஊன்றினர். திருத்தந்தையர் குடும்பச் செபமாலையைப் பெரிதும் போற்றி இருக்கின்றனர்.

‘உங்கள் உள்ளத்திலும், தேசத்திலும் சமாதானம் நிலவ வேண்டும் என்று ஆசிப்பீர்களேயாகில் ஒவ்வொரு மாலையும் ஒன்று சேர்ந்து செபமாலை சொல்லுங்கள். வத்திக்கான் அரண்மனை முழுவதிலுமே செபமாலையை போல வேறொரு பொக்கிஷம் இல்லை. பல பலன்கள் கொடுக்கப்பட்ட இந்த எளிய முறைச் செபமான செபமாலை ஒவ்வொரு குடும்பத்திலும் மாலைதோறும் பிரமாநிக்கமாய் சொல்லப்படுவதாக. இவைதான் நான் உங்களுக்குச் சொல்லும் கடைசி மொழிகள் .நான் விட்டுச் செல்லும் ஞாபகச் சின்னம் ‘ என்றார் 9ம் பத்திநாதர்

செபமாலையை பற்றி நிறைய மடல் எழுதிய திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் ‘குடும்பத்தில் செபமாலை சொல்லாத நாள் இருத்தலாகாது. தனிப்பட்டோரின் பக்தியை வளர்க்கவும், சமூகத் தேவையை பரிகரிக்கவும் அது ஏற்ற வழி. மாதாவின் செபமாலையைக் குடும்பங்களில் சொல்லி வரும் பழைய மகிமை தழைத்திருக்குமேயாகில், தப்பறைகளினாலோ மனம் பொருத்த மூடத்தனமான அறியாமையினாலோ விசுவாசத்தை இழந்து போகும் நிர்ப்பாக்கியம் ஏற்படாது’ என்று மொழிந்தார்.

11ஆம் பத்திநாதர் பெற்றோர்களுக்கு இவ்வாறு அறிவுரை சொல்லுவார் சொல்லுவார் : ‘குடும்பத்தின் தாயும் தந்தையும் குழந்தைகளுக்கு எதிலும் முன்மாதிரியாகக் காட்ட வேண்டும் . எனினும் பிரியமாய் மாலை நேரத்தில் ஒன்றாய்க் கூடி முழந்தாள் படியிட்டு செபமாலை சொல்லுவதில் நன்மாதிரியாயிருக்க வேண்டும். இது மகா லாபகரமான இன்பமயமான வழக்கம். இதனால் குடும்பங்களுக்கு சமாதானமும் ஏராளமான மோட்ச கிருபைகளும் கிடைக்கும் ‘

குடும்பமாக அமர்ந்து செபிப்பது என்பது எத்துணை இனிமையானது. எத்துணை பலம் வாய்ந்தது என்று சுவைத்துப் பார்த்தால் மட்டும் தான் புரியும். அக்டோபர் மாதம் செபமாலை மாதம். குடும்பமாய் செபிப்போம்.



முனைவர் சி. ஜாக்சன்



# செபிப்போம் செபமாலை

செபமாலை மாதமான அக்டோபர் மாதம், **பெண்களுள்** ஆசீர்வதிக்கப் பட்ட அன்னை மரியாவைப் பற்றித் தியானிக்கவும், அர்ப்பண உணர்வுடன் செபிக்கவும் நம்மை அழைக்கிறது. அன்றாட வாழ்வின் எந்தச் சூழலிலும் செபிக்கவும், குடும்பமாக, குழுவாக செபிக்கவும் நம்மைத் தூண்டுகிறது. செபமாலை கிறிஸ்தவ வாழ்வின் விசுவாசத்தையும், நம் ஆன்மீக வாழ்வில் ஒரு ஒழுங்கு முறையையும், கற்பிக்கும் ஆசிரியராக விளங்குகிறது. இதன் வழியாக மக்களை ஒழுக்க நெறியிலும், புனிதத்திலும் வளர்க்கும் கருவியாகவும் செயல்படுகின்றது.

செபமாலை செபிப்பதன் மூலம், நம் சிந்தனையை அன்னை மரியாவை நோக்கித் திருப்புகிறோம். அந்த அன்னை, நம்மை அவள் திருமகன் இயேசுவிடம் இன்னும் நெருக்கமாக அழைத்துச் செல்கிறாள். அது நம்மை இயேசுவை இன்னும் அதிகமாக அன்பு செய்யவும், நேசிக்கவும் வழிநடத்துகிறது. அன்னை தெரசா அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். “நாம் செபமாலை செபிப்பதன் மூலம் நமது துன்பங்களை, இன்னல்களை பரிவுமிக்க இயேசுவிடமும், பாசம் கொண்ட அன்னையிடமும் சமர்ப்பிக்கின்றோம். அன்னையை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். நம் ஆன்மீக வாழ்வு ஆட்டம் காணாது” என்று.

செபமாலையில் நாம் இயேசுவைக் குழந்தையாக, சிலுவையில் மரித்த செம்மறியாக, பாவத்தை வென்ற உயிர்த்த ஆண்டவராகக் காண்கின்றோம், உணர்கின்றோம். செபமாலையை நாம் பயணத்தின்போது, நோயாளியாகப் படுத்திருக்கும்போது, காத்திருக்கும்போது, அன்றாட வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது என்று என்று எப்போது வேண்டுமானாலும் மனதுக்குள் சொல்லி செபிக்கலாம். அது நம் சிந்தனையை எப்பொழுதும் இறைவனை விட்டு விலகாதவாறு பாதுகாக்கும். நம்மைச் சுற்றி எப்போதும் ஒரு நேர்மறையான அதிர்வலைகள் காணப்படும். அது நம்மைப் பாதுகாப்புடன் வழிநடத்தும்.

இம்மாதத்தைப் பயனுள்ள வகையில் எவ்வாறு ஒவ்வொருவரும் தங்களது இல்லத்தில் கொண்டாடலாம்? நம் இல்லத்தில் அன்னையின் திருஉருவத்தை அலங்கரிக்கலாம். நாமே செபமாலை தயாரிக்கலாம். செபமாலை வளையல், மோதிரம், செயின் என்று சிறுசிறு பாசிமணிகளையும், வண்ணப் பூக்களையும் வைத்து செய்து மகிழலாம். குழந்தைகளையும் இவ்வாறு செய்வதற்கு ஊக்கம் தரலாம். பழங்களையும், பயிறு வகைகளையும் மற்றும் உணவுப் பொருள்களையும் வைத்து செபமாலை வடிவில் சிற்றுண்டி தயாரித்து களிக்கலாம். முக்கியமாக செபமாலை வழியாக நாம் பெற்றுக்கொண்ட நம்பிக்கையைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளலாம்.

மனப்பாடமாக ஒருசில செபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வது, ஒரு சலிப்பான செயல் என்றும் ஒருசிலர் சொல்வதைக் கேட்டிருக்கலாம். ஆனால் உண்மை அதுவன்று. பத்துப்பேர் செபமாலை செபிக்கும்போது, பத்துப் பேரின் மனநிலையும் ஒன்றுபோல் இருப்பதில்லை. அது அவரவர் உள்ளத்தில் ஆன்மீக மாற்றும் பெற்று, பல வண்ண மலர்களாக இறைவன் பாதம் சென்றடைகிறது. அதன் பலன் அணு சக்தியை விட மிகவும் பலம் வாய்ந்தது என்பது நிதர்சனமான உண்மை.

செபிப்போம் செபமாலை! நமது வாழ்க்கைப் பயணத்தை அச்சமின்றி, கலக்கமின்றி கடக்க உதவும் தோணியாக அது நம்மை வழிநடத்தும்.



M. பவுல் ராஜ்



# விவிலியப் போட்டி 126

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**சாலமோனின் ஞானம் அதிகாரம் 6 முதல் 10 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தையில் விடையளி :**

1. கதிரவனை விட அழகானது எது?
2. எது நீதிமானைக் காப்பாற்றியது?
3. பேச முடியாதவர்களின் வாயைத் திறந்தது எது?
4. ஒரு கோடி முதல் மறு கோடி வரை ஆற்றலோடு செல்வது எது?
5. ஆற்றல் கொண்டது எது?
6. எதிர்க்க முடியாதது எது. ?
7. விண்மீன் கூட்டத்தினும் சிறந்தது எது?
8. எல்லாவற்றையும் முறையாக ஒழுங்கு படுத்துவது எது?
9. விவேகம், நீதி, துணிவு ஆகியவற்றை கற்பிப்பது எது ?
10. கடவுளின் ஆற்றலில் இருந்து புறப்படும் ஆவி எது?

## விவிலியப் போட்டி 125

**செப்டம்பர் 2025** விடைக்குறிப்புகள்

**சாலமோனின் ஞானம் அதிகாரம் 1 முதல் 5 வரை**

| | | |
|---|---|---|
| 1. | நெறி கட்ட எண்ணம் | 1:3 |
| 2. | பொய் சொல்லும் வாய் | 1:11 |
| 3. | மித்ராஷ் | (முன்னுரை) |
| 4. | நீதிமான்களின் | 3:1 |
| 5. | மின்னல் கீற்று | 5:21 |
| 6. | ஞானம் | 1:6 |
| 7. | நற்பண்பு | 4:1 |
| 8. | முறைகேடு | 5:23 |
| 9. | நீதிக்கு | 1:15 |
| 10. | ஞானமே | 4:9 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.10.2025**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 205**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 123**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. ஜெபமாலை மாதா அன்பியம் — **கல்யாணி செல்வராஜ்**
2. ஜூடு அன்பியம் — **டிரைபேனா**
3. காவல்தூதர் அன்பியம் — **சாந்தி ஆல்ட்ரின்**
4. குழந்தை தெரசா அன்பியம் — **பெனி மொறாயிஸ்**

## பாராட்டுக்குரியவர்கள் : 119

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. பிருந்தா
7. ஜெசி
8. ரீனா மொறாயிஸ்
9. ஜெயா
10. சுஜிதா

**அன்னை தெரசா**
11. ஜான்சிராணி
12. ஜூலியட்ஸ் ரூபி
13. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**
14. டென்சி லோபோ
15. ஆரோன் ஷாரோன்
16. கவாஷினி ஆல்வின்
17. லிசியா ஜெகதீஸ்
18. மிஷெல் மிரல்

**கிறிஸ்தரசர்**
19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜூலியட் சாவியோ
22. லூரட் வசந்த்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
23. சுரேஷ் பிரேமா
24. சுகன் மோனிஷா
25. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
26. டாரல் தீத்தோணிஸ்

**திவ்யபாலன் அன்பியம்**
27. சகாயராணி தனராஜ்
28. ஸ்டார்லக் ஏஞ்சலின்
29. சென்சிலா சகாயராஜ்
30. பிரின்சி
31. ஜோதிஸ்வரி

**பாத்திமா மாதா**
32. சுகந்தா ஸ்டெனி
33. பிச்சம்மாள்
34. அனு ஆல்வின்
35. ஸ்டெபி ரீகன்
36. ரீனா ராஜா
37. இன்பென்ட் பௌஸ்டினா
38. லிண்;டா சீலன்

**இரக்கத்தின் மாதா**
39. இருதயம்மாள் கொன்சால்
40. சகாயராணி
41. சேவியர் அம்மாள் கோமஸ்
42. பிரைட்டன் ஜெரோபின்
43. சித்ரா மோத்தா
44. பாப்டிஸ்டா
45. செல்வி புரோ

**ஜெபமாலை மாதா**
46. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
47. கிறிஸ்டோ ஜெபினா
48. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
49. ஜோ ட்ரினிஷா
50. பிரிசில்லா
51. வெனிட்டாள்
52. ஜூலியஸ் தல்மேதா
53. அல்பின்
54. ரஸ்கின் வசந்தா
55. செல்வராணி
56. சார்லட் பிராங்

**குழந்தை தெரசா**
57. பெர்லி டென்சன்
58. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
59. பிரான்சிஸ் வாஸ்
60. மோனிகா செபஸ்டின்
61. எமல்டா

**மணல் மாதா**
62. ரொசாரி கோமஸ்
63. வெர்ஜினியா
64. ஹெபிட்டா
65. லீமா ரோஸ் ஜாய்
66. கெயிட்டன்

**லூர்து மாதா**
67. சாண்டினா
68. ஆலிவர் வி. ராயர்
69. ஜெனோ சேவியர்
70. ரோஸ்லின் தாமஸ்
71. பிலோ கோமஸ்
72. ரஜூலா ஜான்போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
73. ஜோஸ்பின்

**பனிமய அன்பியம்**
74. சுரேஷ் ஆனி
75. ஜாக்குலின் வினோதினி
76. ராணி
77. ஜூடு ரதி
78. அந்தோணிசாமி
79. சகாயராஜா சகாயராணி
80. மெர்ஸி

**பவுலடியார்**
81. ராஜா ரோஸ்லின்
82. ஒபிலியா தாமஸ்
83. ஹெலினா

**பரிபூரண மாதா**
84. சப்னா கினிஸ்டன்
85. மெடோனோ

**பொம்பெய் மாதா**
86. இம்மாக்குலேட் சதீஷ்
87. டிஃபானி அண்டோ
88. லூடா கான்ஸ்டன்
89. அண்டோ எஃபினா
90. மேத்யூ கர்டோசா
91. தெரசா பிரகாஷ்
92. பெலிக்ஸ் சோபியா
93. லெரின்ஸ் ரொட்ரிகோ
94. ஜான்சிராணி அமல்ராஜ்

**இராயப்பர்**
95. போஸ்கோ ரெனோ
96. டெய்ஸி
97. ரொமில்டா வெனான்சியுஸ்

**சவேரியார்**
98. ஜான்சி ஜெயக்குமார்
99. டெலிலா அமலன்
100. அனுஷியா பீட்டர்
101. ஜோர்னல் ஜென்ஸி
102. வினிஸ்டா ஷெரின்
103. ரூபா மனுவேல்
104. செல்வி அந்தோணிசாமி

**செபஸ்தியார்**
105. பிரவீனா
106. ஜெஸிலா சேவியர்
107. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
108. நேசம்
109. ஜூடி ஆரோக்கியராஜ்
110. பியோ ராயன்

**சிறுமலர் அன்பியம்**
111. விஜி சகாயராஜ்
112. எல்சிட்டா ஆனந்தன்
113. விஜிலியா
114. செலஸ்டின்

**சூசையப்பர்**
115. கிறிஸ் ரீஜோ
116. ஹேமலதா
117. மென்சி
118. ஜெக்குலின்
119. ஜெனி

**திருச்சிலுவை**
120. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
121. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
122. லூர்து லினட்
123. மதியா

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 82

### பரிசு பெறுபவர்கள் : 4

124. திருப்பூர் **பிரான்சிஸ் ஆர்லன்**
125. உடன்குடி **ஸ்நோவின்**
126. காந்திநகர் **பின்டன் சோ.ஃபியா**
127. பாத்திமாநகர் **ஷர்மிளா ரமேஷ்**

### பாராட்டுக்குரியவர்கள் : 78

**சென்னை**
128. ரெஜினா கிரகோரி
129. டெனிசா கிளாட்
130. பிரேமா குணசீலன்
131. மேமா ஸ்டீபன்
132. கமலஜோதி ஜெயசீலன்
133. ஆண்டனிகா ஷெர்லி

**கொடைக்கானல்**
134. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
135. ஜெஸிந்தா மேரி
136. சகோ. ஜான்ஸி மேரி

**திருச்சி**
137. ஜான்ஸி ராணி
138. மோனிட்டா கிறிஸ்டி
139. டோனி
140. மேத்யூ விவேக்

**ஆறுமுகநேரி**
141. தொம்மை அந்தோணி
142. ஜெயராணி

**ஆலந்தலை**
143. பொன்சேகா
144. சகாயராணி
145. மரியம்மாள்

**தருவைக்குளம்**
146. லில்லி சோபியா
147. மைக்கேல் ஸ்டிபானி

**ஏரல்**
148. ஜாய்ஸ் ரெத்னம்

**திருப்பூர்**
149. ததேயூஸ் கரோலின்

**தேனி**
150. குழந்தை தெரஸ்
151. ரோசாரியோ மேரி ஈவ்லின்

**புதியம்புத்தூர்**
152. ஹெலன் அன்னமனி

**கடலூர்**
153. ஹென்றி தாஸ்

**கயத்தார்**
154. அமல்ராஜ்

**சிவகாசி**
155. ஜெர்லின்

**திண்டுக்கல்**
156. ரோசாலி
157. ஜெர்மேன்

**பேட்டை**
158. ஹேலனிட்டா

**சூலூர்**
159. சத்யா சேவியர்

**புன்னைக்காயல்**
160. ஜோஸ்னா

**வீரபாண்டியபட்டணம்**
161. ரேச்சல் வில்லவராயன்

**உவரி**
162. அர்லின் ஈவ்லின்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
163. கிரேட்டா ராஜா
164. ரிமோல்டா
165. டீனுராய் ஜேசுபாலு
166. பீட்டர் ஜெயந்தி
167. பிரபாவதி

**குருஸ்புரம்**
168. பிளாசி செல்வராஜன்
169. ஜான்சி மெண்டிஸ்
170. ஆசிர்வாதம்
171. மாசில்லா
172. பௌவுசி ஜோ மைக்கேல்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
173. சகாயம்
174. டோமினிக்
175. பேபின் ரால்.ஃப்
176. டார்லிமா அமுதன்
177. சுகிர்தா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
178. செக்கரியா சாமுவேல்
179. லிஜியா

**யூதா ததேயு கோவில்**
180. ஆரோக்கிய சர்மிளா
181. ஜூடி ரீத்தம்மாள் மேரி
182. ரோஸ் சேவியர்
183. ஜெனட் சேவியர்
184. லூர்து சுவிதா
185. இம்மானுவேல் சேகர்
186. சகாய மேரி

**அந்தோணியார் கோவில்**
187. டயானா வினோத்;
188. இருதயம்மாள் கபிரியேல்
189. வயோலா ஜான்சன் காந்திநகர்
190. ரியாலினோ
191. ரமேஷ் நர்மதா
192. கிளமென்சியா மேக்டன்
193. அன்சிட்டா

**சார்லஸ் கோவில்**
194. சகாயிட்டா மச்சாது
195. அல்போன்சா பர்னாண்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
196. சகோ. மரிய சூசை ரூபி
197. சகோ. லோரா மேரி
198. பாத்திமா ஏஞ்சலின்
199. சூசை நெவின்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
200. வெர்ஜின்
201. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
202. கோல்வின் ஜேசுராஜ்
203. ஸ்நோ வெண்பா
204. கிருபா

**அண்ணா நகர்**
205. வென்சி ராணி



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 177**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 205**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 16)

## அக்டோபர் - 2025

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்பணி. ஸ்டார்வின் |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி. பிரவீன் ராசு |
| களப் பணியாளர் | : | சகோ. மிக்கேல் அருள்ராஜ் |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாள்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)

✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).

✓ புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.

✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30

✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
மாலை 04.00 மணி - 05.30 மணி

✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.

✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

# பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழுக் கூட்டம் 25.08.2025 திங்கள்கிழமை மாலை 05.15 மணிக்கும், செயற்குழுக் கூட்டம் மாலை 06.00 மணிக்கும் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றன.
2. பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப்பேரவையின் பொதுக்குழு கூட்டம் 26.08.2025 செவ்வாய்க்கிழமை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது.
3. திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் **திருச்சிலுவை மாட்சிப் பெருவிழாவை** முன்னிட்டு, கடந்த 12.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் திருப்பலியும், தொடர்ந்து கொடியேற்றமும் நடைபெற்றன. 13.09.2025 சனிக்கிழமை மாலை 05.30 மணிக்கு பேராலயத்தில் திருப்பலியும், மாலை ஆராதனையும் **அருள்பணி. பெஞ்சமின்** அவர்களின் தலைமையில் நடைபெற்றன. **14.09.2025 ஞாயிற்றுக்கிழமை** அன்று காலை 05.00 மணிக்குப் பேராலய வளாகத்திலுள்ள திருச்சிலுவைக் குருசடியில் திருப்பலி நடைபெற்றது. **திருச்சிலுவை சிற்றாலயத்தில் மாலை 05.30 மணிக்கு** அருள்பணி. ராயன் அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும், தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்றன.
4. **அன்னை மரியாவின் பிறப்பு விழா**வை முன்னிட்டு 08.09.2025 திங்கள்கிழமை அன்று காலை மற்றும் மாலைத் திருப்பலி முடிந்ததும், கேக் வெட்டப்பட்டு, வந்திருந்த அனைவருக்கும் பரிமாறப்பட்டது.
5. விவிலிய மாதத்தை முன்னிட்டு, **14.09.2025** அன்று ஞாயிறு மறைக்கல்வி குழந்தைகளுக்கான சிறப்பு விவிலியப் போட்டிகள் நடைபெற்றன. LKG முதல் 5ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு **திருப்பாடல் ஒப்புவித்தல் போட்டியும்**, 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு புனித மாற்கு நற்செய்தியிலிருந்து **விவிலிய வினாடிவினா போட்டி**யும் நடத்தப்பட்டன.
6. விவிலிய மாதத்தை முன்னிட்டு நற்செய்தி நடுவத்திலிருந்து 100 கேள்விகள் அடங்கிய வினாத்தாள் பெறப்பட்டு பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கு மக்களுக்கு வழங்கப்பட்டது.
7. 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 06.30 மணித் திருப்பலியை புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் மற்றும் ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியர் ஆசிரியர்கள் சிறப்பித்தார்கள்.
8. விவிலிய மாதத்தை முன்னிட்டு **விவிலிய வினாடிவினாப் போட்டி 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்றது.
9. விவிலிய மாதத்தில் பங்கு அளவிலும், ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள் அளவிலும் நடத்தப்பட்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கு **28.09.2025 ஞாயிற்றுக்கிழமை** மாலையில் திவ்விய நற்கருணை ஆசீருக்குப் பின் **அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளின்போது பரிசுகள் வழங்கப்பட்டன.

# பங்கில் நிகழ்ந்தவை



## வரவேற்கிறோம்

### I. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 40. | நதானியேல் ஜோன் டிவோட்டா | ஸ்டீவ் டிவோட்டா-ஸ்டனிகா | 07.09.2025 | மணல் மாதா |



## வாழ்த்துகின்றோம்

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 33. | ரமீரோ | ராஜா - ரோஸ்லின் | 06.09.2025 | பவுலடியார் |
| 34. | ஜோனத்தன் | புரூனோ - யாமினி | 28.09.2025 | பாத்திமா மாதா |
| 35. | ஜிசெல் | புரூனோ - யாமினி | 28.09.2025 | பாத்திமா மாதா |



## ஆசி கூறுகின்றோம்

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 42. | மைக்கேல் அஜிஸ் - ஜெனிலின் செரில் | காவல்தூதர் | 04.09.2025 |
| 43. | அஜில்ட்டன் - மரிய ரெனிஷா | அன்னை தெரசா | 07.09.2025 |
| 44. | ஸ்டெஃபன் - ஜோஸ்னா | சிறுமலர் | 15.09.2025 |



## செபிக்கின்றோம்

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 50. | ஜெல்சன் | சகாயராஜ் | 03.09.2025 | மிக்கேல் அதிதூதர் |
| 51. | அந்தோணியம்மாள் | பாஸ்கர் | 12.09.2025 | அன்னைவேளாங்கன்னி |

# நடைபெறவிருப்பவை

- ★ 03.10.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், **முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 04.10.2025 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத்** திருப்பலியும், சப்பரப் பவனியும் ,தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.



★ 11.10.2025 இரண்டாம் சனிக்கிழமையன்று பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் இரவு 10.00 மணி முதல் 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 05.00 மணிவரை முழு இரவு தொடர் செபமாலை நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 56. | 07.10.2025 | உள்ளத்தால் தியானிக்கும் அன்பு |
| 57. | 14.10.2025 | அனைத்தையும் ஏற்கும் அன்பு |
| 58. | 21.10.2025 | எளியோர்க்கு இரங்கும் அன்பு |
| 59. | 28.10.2025 | நற்செய்தி பறைசாற்றும் அன்பு |



# பனிமய சாட்சியம்

130

**சகாயராணி, தூத்துக்குடி**

எனது தங்கை 2023 ஆம் ஆண்டு பனிமயத் தாயின் தங்கத் தேரோட்டத் திருவிழாவிற்கு வந்திருந்தார். ஊருக்கு சென்றபின் இரண்டு மாதம் கழித்து அவளுக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது. மருத்துவரிடம் சென்று காண்பித்தபோது புற்றுநோய் நான்காம் நிலையை கடந்துவிட்டது என்று சொல்லிவிட்டார். அவள் மிகவும் வருத்தத்தோடு என்னிடம் தெரிவித்தாள். எனது தங்கையின் மகள் ஒரு பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிறாள். மேலும் இரண்டு பேரப்பிள்ளைகளுக்கும் எனது தங்கைதான் துணையாக இருந்து வருகிறாள். நான் கோவிலில் திருப்பலி நேரத்தில் இரண்டாம் வாசகத்தின் முன் என் தங்கையைக் குறித்து இந்த வியாதிதான் என்று உங்களுக்கு விருப்பமானால் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வழியை அமைத்துத் தாருங்கள் என்று தாயிடம் மன்றாடும் வேளையில் வாசகத்தில் நோய் நீங்கிற்று என்ற அற்புதமான வார்த்தை வாசிக்கப்பட்டது. அவ்வார்த்தையின்படியே எனது தங்கைக்கும் புற்றுநோயிலிருந்து பூரணகுணம் கிடைத்தது. இந்த அற்புதத்தை மாதா வழியாக செய்த இறைவனுக்கு கோடான கோடி நன்றி.

3rd year remembrance

33rd year remembrance



# T. CELINE FERNANDO

Birth 05.06.1933

Death 21.10.2022

# A. ROZARIO MISSIER

Birth 06.10.1926

Death 24.04.1992

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வின்
# 60ஆம் ஆண்டு நினைவு

**10.10.2025**

"அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போர்க்கு ஒப்பாவர்.
தந்தையரை மதிப்போருக்கு தங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சியுடன் நீடு வாழ்வார்."

*சீஞா 3:4,5*

**60வது வருடம்** **30வது வருடம்**



**05.11.1917**
**10.10.1965**

**06.10.1918**
**03.03.1996**

## G. பேதுரு பர்னாந்து - ரொசாரி அம்மாள்

எங்களை பண்போடும் பாசத்தோடும் வளர்க்க
உழைத்து ஆளாக்கி எங்களுக்கு உழைக்க கற்றுத்தந்து நல்வழிப்படுத்திய
பேரன்புமிக்க பெற்றோருக்காக இறைவனை வேண்டி நன்றி கூற
தூயகத்தில் இறைவனை போற்றுகிறோம் (திபா 150).

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பூட்டி பிள்ளைகள்**
**உற்றார் உறவினர்**

*15, சவேரியா பிச்சை சந்து,*
*மாதா கோவில் காம்பவுன்ட்,*
*தூத்துக்குடி - 1.*

# விண்ணக வாழ்வின்

## நான்காம் ஆண்டு அஞ்சலி    ஏழாம் ஆண்டு அஞ்சலி

"வாழ்க்கைப் பயணத்தில் உம் விதிமுறைகள் எனக்குப் புகழ் பாக்களாய் உள்ளன" (திபா 119:54)

மண்ணில்
03.03.1943
★★★
விண்ணில்
07.05.2021





மண்ணில்
22.02.1949
★★★
விண்ணில்
17.12.2017

## A.பிரசாதராஜன் விக்டோரியா

## I.அந்தோணி அல்போன்ஸா மார்கரெட் ஜெயதேவி பர்னாண்டோ

### ஆத்துமத்திற்கான ஜெபம்

நெஞ்சுக்கும் மார்புக்கும் நிறைந்த சிலுவை, நீச பிசாசுகளை விரட்டும் சிலுவை,
சிலுவை அடியில் தலையை வைத்தேன், திருவிலாவில் உடலை வைத்தேன்.
எனக்கு உதவியாக வாரும் திருச்சிலுவை ஐயாவே – ஆமென்.
உம் திருவடி வந்துள்ள உம் அடியவர்களை கருணை கூர்ந்து உம் விண்ணகத்தில்
சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம் – ஆமென்.

### பிரிவால் துயருறும்

அன்பு மகன்கள் : வினோத் விக்டோரியா, ஷார்லோ விக்டோரியா
மருமக்கள், பேரன் பேத்திகள், சகோதர சகோதரிகள்
மற்றும் உற்றார் உறவினர்

SHINY Ph : 98421 31493